விடுதலை

சேனை 27—2—1948 வெள்ளிக்கிழமை

1948—49 வரவு செலவுத் திட்டம்

நிதி மந்திரி ஸ்ரீமான் கோபால் ரெட்டியவர்கள் வரப்போகும் நிதி ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தை சென்னை சட்டசபை முன்பு சமர்ப்பித்துள்ளார் இந்த திட்டத்தில் குறிப்பிடத்தக்க பெரிய சீரமைப்புத் திட்டம் எதுவுமே இல்லை. "சாதாரண குடும்ப பட்ஜெட்டைப் போலவே இருக்கிறது," என்றதை எனக் மந்திரியாரே ஒப்புக்கொண்டிருக்கிறார்.

குடும்ப வரவு செலவுத் திட்டத்தில் வரவுக்கேற்ப செலவு வகுக்கப்பட வேண்டும். ஆனால் அரசாங்க வரவுசெலவுத் திட்டத்தில் செலவை முதலில் நிர்ணயித்துக் கொண்டு அதன்படி வரவு இனங்களைச் சரிப்படுத்த வேண்டும். குடும்பத்தில் செலவுக்கேற்றபடி வரவை அதிகப்படுத்த முடியாத; வரவு குறைவாயிருந்தால் செலவையும் சுருக்கியே தீர வேண்டும். ஆனால் அரசாங்க நிர்வாகத்தில் செலவு அதிகப்பட்டுக் கொண்டுதானிருக்கும்; அதற்கேற்ற முறையில் புதுப் புது வருமான முறைகளைக் கண்டு பிடித்துக் கொண்டே இருக்க வேண்டும்.

நிதி ஆண்டில் நூண்டுவிழும் 562 லட்சத்தை ஈடு செய்வதற்காக, ரெவின்யூ சீர்வரி நிதியிலிருந்து 5 கோடி ரூபாய்எடுக்கப்பட்டிருக்கிறதாம். கடந்த மூன்று ஆண்டுகளாகி இவ்விதம் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கும் தொகை 806 லட்சம் ரூபாயாகிறதாம். இதனால் 31—3—49 அன்று 23 கோடி ரூபாய்தான் ரெவின்யூ சீர்வரி நிதியில் மிச்சமிருக்கும். இவ்வாறு எடுத்துக்கொண்டே யிருந்தால் சீர்வரி நிதி இன்னும் 4—5 ஆண்டுகளுக்குள்ளாகவே கரைந்து போய்விடும். அதன் பிறகு மாபெருஞ் சீரமைப்புத் திட்டங்களுக்கான மூலதனம் இருக்காது.

வரப்போகும் ஆண்டிற்கு கட்டாய ஆரம்பக் கல்வியோ, வயது வந்தவர் கல்வியோ, தொழிற் கல்வியோ, விரிவான விடு கட்டும் திட்டமோ, உடனடியான அதிக உணவு உற்பத்தித் திட்டமோ எதுவும் இந்த பட்ஜெட்டில் காணப்படவில்லை. உணவு உற்பத்தியை அதிகப்படுத்துவதற்கு ஏதோ ஒரு 5 ஆண்டுத் திட்டம் இருப்பதாகவும், கூட்டுறவு முறையில் விடு கட்டும் திட்டம் துவக்கப்பட்டிருப்பதாகவும், பெயரளவில் ஒவ்வொரு பிரச்னையும் தொட்டுக்காட்டப்பட்டிருக்கிறதே தவிர, விரிவான பலன்தரக்கூடிய வகையில் வரவு செலவுத் திட்டத்தில் எந்த ஒரு ஏற்பாடும் நமக்குத் தென்படவில்லை அட்டவணச் ஆட்சி அல்லது இரட்டை ஆட்சியில் எந்த மாறிக் திட்டம் இருந்து வந்ததோ அதைப் போலத்தான் இருக்கிறதே தவிர, வறுமையையும்படிப்பின்மையையும், பஞ்சத்தையும் களையக்கூடியபுரட்சிகரமான திட்டம் ஒன்றுகூட இல்லை.

ஆனால் ஒரு விஷயம் கனம் கோபாலரவர்களின் டேக்சின்மூலம் நன்றாக வெளிப்பட்டிருக்கிறது. இம்மாகாணத்தின் பொருளாதாரவளர்ச்சிக்கு மத்திய ஆட்சி எவ்வளவு பெரிய முட்டுக் கட்டையாக இருந்து வருகிறது என்பது பல விடங்களில் தொளிந்துக்கொண்டேயிருக்கிறது.

சர்க்காரால் நடத்தப்படும் தொழில்களில் கிடைக்கும் லாபத்திற்குக் கூட (கம்பெனிகளால் நடத்தப்படும் தொழில்களுக்கு இருப்பது போல்) மத்திய சர்க்கார் வரிவிதிக்கப்போவதாக புதிய அரசியல் திட்டத்தில் ஒரு ஆலோசனை இருந்து வருகிறதாம். ஆனால் இம்மாகாண சர்க்கார் இதை எதிர்க்கிறார்களாம். தொழில்களை சர்க்கார் ஏற்று நடத்துவது என்ற அடிப்படைத் தத்துவத்தையே இது பாதிக்குமாதலால் மத்திய சர்க்கார் தீர்மானத்தை ஏற்றுக்கொள்ளப் போவதில்லையாம்.

இது மட்டுமல்ல. வருமான வரியில் 50 சத விகிதமும், கார்ப்பொரேஷன் வரியில் 50 சத விகிதமும் சென்ட்ரல் கவர்ன்மெண்டுக்கு முழுதையும், மாகாண சர்க்காருக்கே கொடுக்க வேண்டுமென்று அரசியல் நிர்ணய சபையில் ஒரு திருத்தத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்ராம்.

இதுமட்டுமா? இம்மாகாணத்தில் இருப்புக் களிஞ்களைத் தோண்டும் விவகாரமில் உடனடியாக்கவேண்டுமென்றும் மத்திய ஆட்சியைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்களாம். "மத்திய சர்க்கார் வாளா யிருந்து விட்டால், நம் சோங்ச்சேலவிலேயே இரும்பும் எஃகும் இம்மானத்தில் உற்பத்தி செய்ய முயற்சிப்போம்," என்று எச்சரிக்கை விடுத்துள்ளார்.

சேலம் திருச்சி மாவட்டங்களில் 30 கோடி டன்னும், கர்நூல் மாவட்டத்தில் 30 லட்சம் டன்னும் இரும்பு கிடைக்கும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. கர்நூலில் ஆண்டு ஒன்றுக்கு 10,000 டன் சிமெண்ட் உற்பத்திசெய்யக்கூடிய நிட்டம் ஆலோசனையிலிருக்கிறதாம். தென் ஆற்காடு மாவட்டத்தில் படலூர், விருதாசலம் தாலுகா பகுதிகளில், 150—200 அடி ஆழத்தில் 23 சதுர மைல் அளவுக்கு சுமார் 50 கோடி டன் நிலக்கரி இருப்பதாக நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

கனம் கோபால்ரெட்டியார் மத்திய ஆட்சிசந்த உதவியும்செய்யாது என்பதை எதிர்பார்த்தே, "செய்யாவிட்டால் நாங்களே தொடங்கி போகிறோம்", என்று கூறியிருக்கிறார்.

திராவிட கழகத்தின் லட்சியப் பாதையை நோக்கி வந்துகொண்டிருக்கிறார், நிதி மந்திரியார் என்றுச்சி

இரும்புக்கோ எஃகுக்கோ, தானிக்கோ, நிலக்கரிக்கோ, சிமெண்ட்டுக்கோ, தானியத்திற்கோ, கூடுமான வரையில் திராவிடம் வடநாட்டை எதிர்பார்க்கக்கூடாது. வெளி நாட்டு நிபுணர்களைக்கொண்டு இம்மாகாணத்தில் டெக்கும் புதை பொருள்களை அவ்வளவையும் வெளிப்படுத்த வேண்டும். அந்த முயற்சியில் பால்மியாவோ, டாட்டாவோ, யார் குறுக்கிட்டாலும் அவர்கள் முதலில் ஏறி, மேலே செல்ல வேண்டும். அவர்களுக்குத் துணையாக மத்திய சர்க்கார், நலையிடுமோயானால், நிச்சயம் தலையிட்டே தீரும்.) அதற்குரிய நமக்கும் தொடர்பே யில்லை என்று வெளிப்படையாகக் கூறிவிட வேண்டும். இப்படிக் கூறுவது "ராஜாங்க துரோகம்" என்று கூறப்படுமேயானால் அதை எல்லாத் திராவிடர்களும் பெருமையுடன் வரவேற்கவேண்டும்.

மார்வா மாகாணம்

இங்கூர், குவாலியர் இணையும்

இங்கூர், பிப். 25—

அமைக்கப்பட போகும் மால்வா மாகாணத்துடன் தாங்களும் சேருவதாக இங்கூர், குவாலியர் சமஸ்தான மன்னர்கள் ஒத்துக்கொண்டு விட்டதாகத் தெரிய வருகிறது.

இந்த முடிவினால் மத்திய இந்திய சமஸ்தானங்கள் யூனியன் நிறுவ இருந்த தடை விலகிவிட்டது. இன்று குவாலியர் மன்னர் இங்கு வந்து இங்கூர் மன்னருடன் கலந்தாலோசித்த பின்னரே இந்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

கத்தியவாருக்குத் நுறைமுகம்

பரோடா, பிப். 24—

கத்தியவார் குஜராத்தின் ஒரு தொந்த துறைமுகத்தை ஏற்பிரத்துவதற்காக ஒரு என்ற துறைமுகத்தை அபிவிருத்தி செய்ய சமஸ்தான சர்க்கார் ஏற்பாடு செய்திருக்கிறது.

—ஞானோப்.

பெரியார் சுற்றுப் பிரயாணம்

வேடிச்சி பாளையம்

24-2-48 ல் நெற்பாள 'நல்'வலத்திற்கு பின்பு இன்றுமாலை 5-30 மணிக்கு இவ்வூர் திராவிட கழகத்தின் சார்பாக காஞ்சீபுரம் கே. ராமசாமி அவர்கள் தலைமையில் நிதி யளிப்பப் பொதுகூட்டம் இனிது நடைபெற்றது. தலைமையம் கழக நிதிக்கென்று ரூ. 51 வேடிச்சியானையம் திராவிட கழகத்தின் சார்பாக வும் 131 காலணாக்கள் தமிழில் திராவிட கழகத் தலைவர் எம். சீனிவாசனும் தலைவரின் சார்பாகவும் நன்கொடையாக அளிக்கப் பட்டது. மேற்படி நிதியளிப்புக்கு நன்றி கூறமுகத்தான் பெரியார் அவர்கள் திராவிட கழகக் கொள்கைகளை விளக்கி சுமார் 2 மணி நேரம் சொற்பொழிவு நிகழ்த்தினார். பிறகு ஒன்றரையரிகில் கூறப்பட கூட்டம் இனிது முடிவுற்றது.

பொதுக் கூட்ட ஆரம்பத்தில் தோழர் கே. ராமசாமி அவர்கள் தலைமையில் குலைப்பாளர் தோழர் எம். கே. கிருஷ்ணசாமி அவர்களுக்கும் தோழிப் முகமணி ஸ்டைமையார் அவர்களுக்கும் கலப்பு வாழ்க்கை ஒப்பந்தத் திருமணம் இனிது நடைபெற்றது. மணமகன் வேளான வருப்பையும் மணமகள் பார்ப்பன வகுப்பையும் சார்ந்தவர்கள்.

லால் குடி:

25-2-48 ல் இன்று மாலை 5-30 மணிக்கு இவ்வூர் திராவிட கழகத்தின் சார்பாக தோழர் முத்துவண்ணு அவர்கள் தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் இனிது நடைபெற்றது. பல்லாயிரக் கணக்கான மக்கள் கூட்டத்திற்கு வந்திருந்தனர். ஒலி பெருக்கியும் அமைக்கப்பட்டிருந்தது. அதிசயம் அடையத் கண்ட ஈன் கொண்டன தளிக்கப்பட்டன.

லால்குடி ஸ்டோன் கருட்டுத் தொழிலாளர் 121 காலணா.

மணக்கால் நி. கழகம் 195 காலணா

பிறகு பெரியார் அவர்கள் திராவிட கழகக் கொள்கைகளை விளக்கி சுமார் 3 மணி நேரம் பேசினார்கள். பிறகு நள்ளிரவிற்கு மேல் கூட்டம் இனிது முடிவு பெரியார் அவர்கள் திருச்சி, தஞ்சாவூர் வழியாக மேலூருக்கும் பி. யாமை ஆனார்கள்.

ஜூனகாத் பற்றி

டோமினியன் சட்டசபையில் பட்டேல்

புதுடெல்லி, பிப். 26—

இன்று இந்திய டோமினியன் பார்லிமெண்டில் சேத் கோவிந்ததாஸ் பேசியபொழுதும் பதிலளித்த சர்தார் வல்லபாய் பட்டேல் ஜூனகாத் யோட்டெடுப்பினால் இந்திய டோமினியனுடன் சேர்வது நிச்சயமாகிவிட்டது என்று தெரிவித்தார்.

மார்ச் முதல் வாரம் அய்யங்கார் திருமுபவுரா

லேச்சர்லேஸ், பிப் 26—

இந்தியக் தூதுக் குழுவின் தலைவரான என். கோபாலசாமி அய்யங்காரு புது டெல்லியிலிருந்து மார்சு முதல் வாரத்திற்குள் வந்து சேர்ந்து விடவுமென்று பாதுகாப்பு சபையில் இன்றிவு அறிக்கப்பட்டது.

தேன் கோரியாவில் தேர்தல் நடைபெற்றது

லேச்சர்லேஸ், பிப். 26—

நொர்கு கொரியாவில் தேர்தல் நடத்துவதென்று அவெரிக்காவின் தீர்மானம் ஐக்கிய நாடுகளின் சிறு சபையில் 31 வோட்டுகள் பெற்று நிறை'வறியது எதிராக 2 வோட்டுகளே கிடைத்தன தீர்மானத்தை எதிர்த்து ஆஸ்ட்ரேலியாவும் ஈனமாயும் வோட்டளித்தன.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பாகிஸ்தான் பதில் :

எம். கே. வெள்ளோடியின் பிரசுகத்திற்கு சபருல்லா பதில் கூறுகையில், 'ஜுனாகத் தோதல் ஒதுக்கப்பட்டபோது வேண்டுமென்று பாதுகாப்பு சபைத் தலையர் கூறியதாக ரான என்னுடைய பிரசுகத்தில் கூறவில்லை. ஆனால் பாதுகாப்பு சபையின் முடிவு வெளியாகும் வரையில் தேர்தல் ஒதுக்கைக்கலாமென்று சபையின் மூலம் ஒரு வேண்டுகோள் விடுக்கப்பட்டதாக என்பதை கூறினேன். ஜுனாகத் நிவாசிகளை சமஸ்தான சீர்வரத்தை இந்தியாவிடம் ஒப்படைத்தாக வெள்ளோடி கூறியது சரியல்ல. இந்தியா சமஸ்தானத்தில் ஒரு நாடுக்கு முன்னிய அதிகாரிகளை கைது செய்ததாகவும் கூறியது மறுக்க முடியாது" என்று கூறினார்.

பாக்கிஸ்தானிலிருந்து ஜுனகாத் பற்றிய விவரம் ஒத்துவைக்கப்பட்டது.

நைஸாம் கொலை முயற்சி வழக்கில் தீர்ப்பு

முதல் எதிரி நாராயணராவுக்கு மரண தண்டனை

ஹைதராபாத், பிப்.—

கடந்த டிசம்பர் 4-ந்தேதி ஹைதராபாத் நிஜாம் சென்ற காரின் மீது ஒரு நாட்டு வெடி குண்டை வீசி கொலை செய்ய முயன்ற வழக்கில் இன்று ஹைதராபாத் உயர் நீதி மன்ற நீதிபதி ஜஸ்டிஸ்முர்தாசா அர்மதுகான் தீர்ப்பளித்தார்.

கொலை செய்ய முயன்றவழக்கில் முதல் எதிரியான நாராயணராவ் என்பவருக்கு அஸாபியா பேனல் கோட் 78 வது வாத்தின்படி 'மன்னரை எதிரியாகக் கொண்டது' என்ற குற்றச் சாட்டின்கீழ் மரண தண்டனை அளிக்கப்பட்டது. அவர் மீது சாட்டப் பட்டுள்ள மூன்று குற்றங்களுக்கு முறையே முதல் குற்றத்துக்கு மரண தண்டனையும், கொலை செய்ய முயன்றது என்ற இரண்டாவது குற்றத்திற்காக ஆயுட் தண்டனையும் வெடிமருந்துப் பொருள்களை வைத்திருந்தார் என்ற மூன்றாவது குற்றத்திற்காக ஐந்து ஆண்டு கடுங்காவல் தண்டனையும்முறையே அளிக்கப்பட்டது.

இரண்டாவது எதிரியான குண்டையா என்பவருக்கு கொலை செய்யும் சதியில் சம்பந்தப்பட குற்றத்திற்காக ஆயுட் தண்டனையும் வெடிமருந்துப் பொருள்களை வைத்திருந்தார் என்ற மூன்றாவது குற்றத்திற்காக மூன்று ஆண்டு கடுங்காவல் தண்டனையும் விதிக்கப் பட்டது.

குற்றவாளிகள் இருவருடைய சொத்துக்களையும் பற் முதல் செய்யுமாறு உத்திரவிடப்பட்டது.

முன்றாவது எதிரி தான் வழக்கில் அப்ருவராக மிருந்தவன்.

வழக்கின் சாராம்சம்:—

டிசம்பர் 4-ந்தேதி மாலை தன் மனைவியிலிருந்து காரில் நிஜாம் வெளியே வந்ததும் தந்தை யார் மீது ஒரு நாட்டு வெடிகுண்டை நாராயணராவ் வீசினான் என்பதும் தற்செயலாக வெடிகுண்டு காரில் பட்டு ரோட்டில் விழுந்து பின் அது வெடிக்கவே அதன் விளைவாக இறுவர் காயமடைந்தனர் என்ப'தயாகும். அத்தடன் வழக்கை முறையில் அரசியல் சதுரங்கள் சாதிக்கவும். என்பதற்காக 13 பேர் அடங்கிய ஒரு புரட்சி இயக்கமும் அமைக்கப் பட்டதாக தாவும் பிராசிகியூஷன் தரப்பில் கூறப்பட்டது. இந்த புரட்சி இயக்கம் எதிட்டதன் காரணம் இந்திய யூனியனுடன் ஹைதராபாத்தை சேர்த்து செய்யவே என்பதாம்

நிஜாமைக்கொல்லும் நோக்குடன் முதல் எதிரி நாராயண ராவ் ஹைதராபாத் வருமுன் வேரூப்பூரில் ஒடிக் கொண்டிருந்த காரை தாக்கி புதைக்கப்படுத்திக் கொண்டு வந்தவனென்றும் பிராசிகியூஷன் தரப்பினர் எடுத்துக் கூறினர். (அ. பி)

தென்னாப்பிரிக்கச் சர்க்காரின் அடக்குமுறை தர்பார் டாடு, நாய்க்கர்

ஆசியோருக்கு ஆறுமாதக் கடுங்காவல்

டர்பன், பிப். 26—

ட்ரான்ஸ்வால், இந்திய காங்கிரசின் தலைவர்களான டாக்டர் ஏம். எம். டாடு டாக்டர் ஜி. எம் நாய்க்கர் ஆகியோர். 1913-ம் வருடத்திய குடியேறா தோர் தெடுப்புச் சட்டத்திற்கு விரோதமாக, தென்னாப்பிரிக்காவிலுள்ள ஆசிய மக்கள் செட்டாக் எல்லையைத் தாண்டி, ட்ரான்ஸ் வாலுக்குள் நுழைவதை ஆதரித்ததாகவும் அதற்கு உடந்தையாயிருந்ததாகவும் குற்றஞ் சாட்டப்பட்டு, டர்பன் கோட்டொன்றால் (அதிகார) ஆதமாதனவிற்குக் கடுங்காவல் விதிக்கப்பட்டனர்.

காங்கிரசினர், ஒன்று சேர்க்கப்பட்ட இந்தியர்களின் கூட்டங்கள் பலவோல்ஸ்ரட் என்ற இடத்தில் கெட்டால் எல்லையைத்தண்டியிட்டன.

சென்னை சர்க்காரின் தேசிய பாதுகாப்புப்பணி—

சென்னை, பிப். 25—

சில ராட்சஸர்களுக்கு முன் சென்னை சட்டசபையில் நிறைவேற்றப்பட்ட தேசிய பாதுகாப்புச்சட்டம், இந்திய கவர்னர் ஜெனரலின் அங்கீகாரத்தை பெற்றுவிட்டது.

சென்னை சர்க்கார், மேற்சொன்ன தேசிய பாதுகாப்புச் சட்டத்தை, ஒரு ஆண்டிற்கு வேலை பார்க்க வேண்டுமென்ற ஒப்பந்த பிரகாரமிய பேரில், பள்ளிண்டு தளர்த்தப்பட்டு வெயிட்டுள்ளனர். சர்க்கார், தனக்கு தாகவோ, ஒரு வாத முன்னறிவிப்பின் பேரில் ஒப்பந்தத்தை முறித்துக்கொள்ளலாம்.

புலவர்க்குமடை

பட்டம்மாளும்,சுந்தராம்பாளும்

சங்கீத விமர்சனமல்ல. கலை ஆராய்ச்சியுமல்ல. தமிழ் இசை வளர்ச்சியுமல்ல. அற்பமான ஒரு விஷயம், புரட்சி வீரர்களைப் பொறுத்த வரையில். ஆனால் அடிப்படையான விஷயம் என்னைப் பொறுத்த மட்டில்.

"பார்ப்பான அய்யன் என்ற காலமும் போச்சே! வெள்ளைப் முகங்கள் துரை என்ற காலமும் போச்சே," என்ற எழுதினார், சுப்பிரமணிய பாரதியார். இதனாலேயே அவரை ஒரு பெரிய சமுதாயப் புரட்சிக்காரர் என்று கூறவில்லை. எத்தனையோ இடங்களில் 'ஆரிய' என்ற பெருமையைக் கூறிக்கொள்கிறார். அது போகட்டும்.

"ஆடுவோமே! பள்ளுப்பாடுவோமே;" என்ற பாடலில் உள்ளது தான் 'பார்ப்பான அய்யன் என்ற காலமும் போச்சே' என்பது. ஆனால் கினிராவிலும், இதைத் தட்டிலும் இந்த அடியை மட்டும் விழுங்கி விட்டார், இன உணர்ச்சிகொண்ட பாடிபார் பட்டம்மாள்.

பல மாதங்களுக்குப் பிறகு தமிழ் இசை அரங்கில் பாடியோர் சுந்தராம்பாள் இந்த பாட்டைப் பாடினார். 'பார்ப்பான அய்யனென்ற காலமும் போச்சே!' என்ற அடியைத் தொடர்ந்து ஒரே நைதட்டலும், ஆரவாரமும். ஏன்? பாரதியின் புத்தகத்தில் இருப்பதுதானே! எல்லோரும் சாதாரணமாகப் படுவதுதானே! இதற்கு ஏன் இவ்வளவு பெரிய கூச்சல்?

புரட்சிப் பிரசங்கியார்களுக்கு இவ்விஷயம் புரியாது. பிரம்மாண்டமான அரசியல் — பெருளாதார பிரச்னைகளைப் பற்றி மட்டுமே வேலை செய்யக்கூடிய முதிர்ந்த மூளைகளுக்கு இதன் காரணம் விளங்காது.

பார்ப்பனப் பாடகி விழுங்கிய பகுதியைத் நிராவிடப் பாடகி பாடினார்! அற்பர்தாத் தான்!

இதற்காக இங்கிலீஷ் வாரப் பத்திரிகை யொன்று (ஆரியரை ஆசிரியராகக் கொண்டது) தன்னிக் குதிக்கிறது. இந்த அடி பாரதியார் பாடப் பட்டதில்லையாம்! இடைச்செருகலாம்! எவனோ அயோக்கியன் நுழைத்து விட்டானாம்! பிராமணர்களைத் தாக்குகிற சொற்களாம்! நாக்கிலும், மூக்கிலும் காலூறுதேள் கொட்டி விட்டதுபோல அலறிக் குதிக்கிறது, அந்த ஆரியப் பத்திரிகை!

உள்ளதை மறைக்கலாமாம்! ஆனால் அதை எடுத்துச் சொல்வது "பிராமண துவேஷமாம்!

காந்தியாரை ஒரு பார்ப்பான் கொல்லலாமாம்! அதை எடுத்துச் சொல்வது குற்றமாம்! எல்லா அயோக்கியர்களும் மறைப்பது போல நாமும் மறைத்துவிட வேண்டுமாம்! விஷயிகளுக் டேடிசாளும் தன் மறைத்துவிட்டார்கள்! பட்டம்மாள் இனத்தார்! அல்லது அவர் புன்சிரிப்புக்குக் காலை நக்கும் 'கயமை'க் கூட்டம்!

எனக்குப் பழக்கமான பண்மூட்டை ஒருவர். பெரியபாங்கியின் தலைவர். ஒரு நாள் தற்செயலாய் என்னைச் சந்தித்தார்.

"ஹிந்து' ஆசிரியர் என்னை மிரட்டுகிறார்! என்ன செய்வது ஸார்?" என்று கேட்டார்.

"என் மிரட்டுகிறார்? அவரை என்ன செய்தீர்கள்?" என்று கேட்டேன்

"நான் ஒன்றும் செய்யவில்லை. மாதம் 1000 ரூபாய்க்மேல் விளம்பரம்கூடத் தந்துகொண் டிருக்கிறேன். என் பாங்கியில் இந்த 3, 4 வருஷத்துக்குள்ளாக 5—6 பிராமண குமாஸ்தாக்களை எடுத்து விட்டேன் தமிழர்களைப் போட்டு விட்டேனாம்! அதற்கு நாலும் புதிதாக வந்திருக்கும் திராவிடக்காரியதரிசியும் தான் காரணமாம்! 'என்ன முதலியார் சார், நாய்க்கன் வாசனை வீசுகிறதே? வேண்டாம். கேஸும். பாங்கியே ஒழிஞ்சுபோகும்' என்று மிரட்டுகிறார். எனக்குப் பயமாயிருக்கிறதே! என்ன செய்வது?" என்று கேட்டார்.

"இவ்வளவு பெரிய பணக்காரர் எனயபா அவருக்காகப் பயப்படுகிறீர்? 'உன் 'ஹிந்து' ஆசிரியும் நிகிவாக உறுப்பினராயிருக்கும் 'ஹிந்து ஹைஸ்கூலியும்' எத்தனை தமிழர்கள் இருக்கிறார்கள்? எல்லாம் உங்கள் கூட்டமாகத்தானே இருக்கிறது? அது மட்டும் பரவாயில்லையோ? என்று திருப்பிக்கேட்கிறதானே, ஸார்? என்று கேட்டேன்.

"ஐயையோ! அவரையா? ஒமக்குராரே அவரைக் கண்டால் நடுங்குகிறாரே! இன்ன ஆர்.எஸ் எஸ். தலைவரை விட்டுவிடுங்கள் என்று சொன்னால் உடனே விட்டுவிடுகிறாரே! நான் எந்த மூலை? உங்கள் பேச்சுகளைக் கேட்கமாட்டேனாய்யா!" என்று கூறிவிட்டார்.

அத்துடன் நிற்கவில்லை. "என்னை அவர்மிரட்டியசங்கதியையாருக்கும் சொல்லிந்த தொலைக்காதீர்கள்; ஏன் ஒரு "பிள்ளையில்" உள்ளவன்' என்று கேட்டுக்கொண்டார்.

"ஆஹா! அப்படியே ஆகட்டும். இரகசியமாவே வைத்திருக்கிறேன்," என்று கூறினேன்.

வாசகர்களே! பாருக்கும் கறாரிர்கள். உங்கள் மனதிலேயே போட்டு வைத்து, உங்கள் கடமை எதுவோ அதைச் செய்யுங்கள், போதும்! ஒரு ஆரிய பத்திரிகாசிரியரை கோர்ட் நுட்ஜ் கியானம் முதல் பாங்கிவரை வேலைவரையில் என் னென்ன காரியங்களில் தன் இனத்தைக் கவனிக்கிறார், பாருங்கள்!

நம்மைச் சேர்ந்ததுகளோ, நாலு காசு கையில் கிடைத்தவுடனே, தரை தலைகீழாய் நிற்குதுகள்! 'கட்சியாவது, இனமாவது, என்கிறதுகள் 'என் சொந்த யோக்யதையால் பெரிய மனுஷன் ஆனேன்,' என்குதுகள் 'கம்'னுக்கும் எனக்கும் சம்பந்தமேயில்லை' என்குதுகள்! "இல்லெல்லாம் நில்லைறப் பிரச்னை; பார்த்த நோக்கம்வேண்டும்," என்று பேசுதுகள்!

இனுவாசனைப் பார்த்தாவது இதுகளுக்குப் புத்திவருமா?

பேர்ள் துறை முகத்திற்குத் திடீர் தாக்குதல்?

ரஷ்யா மீது அமெரிக்கக் கவர்னர் குற்றச்சாட்டு

ஸ்வின்சி (மாஸ) பிப். 25—

மஸாசஸட்ஸ் லெப்டினட்—கவர்னர், "1941-ல் ஜப்பானியர்கள் செய்தது போல், பேர்ள் துறை முகத்தைத் திடீரெனத்தாக்க ஜாவாவில் ரஷ்யப் பிரதிநிதி தயார் செய்து வருகின்றனர்" எனக்குற்றஞ் சாட்டியுள்ளார். அந்த லெப்டினட் கவர்னரான தேவர் ஹூர், டபிள்யு. கூலிட்ஜ், பிபிக் வட்டாரத்தைச் சேர்ந்த கவர்னர் எம். ஸ்டெர்ன்பாமிடமிருந்து

சிங்கப்பூர் இந்தியன் பேங்க்

குமஸ்தாக்கள் வேலை நிறுத்தம்

சிங்கப்பூர், பிப். 25—

சிங்கப்பூரிலுள்ள இந்தியன் பேங்குமஸ்தாக்களும் அட்டெண்டர்களும் இன்று காலை ஒரு மணிநேர சமிக்ஞை வேலை நிறுத்தம் செய்தனர். வாழ்க்கைத் தரம், பஞ்சப்படி ஆகியவை சம்பந்தமான அவர்கள் கோரிக்கைகளுக்கு பேங்க் அதிகாரிகள் இணங்காதது ஆட்சேபிக்கும் வகையில் மேற்படி வேலை நிறுத்தம் செய்யப்பட்டது.

கைக்கூலி பெற்ற நிர்வாட் ஜுவனை ஆதாரங்களின் அடிப்படையில் பேரில் தம் குற்றச்சாட்டைத் தயாரித்துள்ளார்.